

# பொருட்களை விட மனித மதிப்பே உயர்ந்தது!

தமிழில்:
Er. பெ. சூரியகுமார் அசோகா

"சரியான வாழ்வாதாரம்" (சம்மா அஜீவா) என்பது பௌத்தம் காட்டும் எண்வழி மார்க்கத்தில் ஒன்றாகும். இதன் அடிப்படையில் "பௌத்தப் பொருளாதாரம்" என்ற ஒன்று அமைவதற்கான வாய்ப்புள்ளது என்பது தெளிவு.

தங்கள் பாரம்பரியத்திற்கு நேர்மையாக இருக்க விரும்புவதாக பெரும்பாலான பௌத்த நாடுகள் அடிக்கடி குறிப்பிடுவதைக் காணலாம். பர்மா இவ்வாறு கூறுகிறது: "மதத்தின் மதிப்புகளுக்கும், பொருளாதார முன்னேற்றத்திற்குமிடையே எந்தவித முரணையும் புதிய பர்மா தேசம் காணவில்லை. ஆன்மீகம் மற்றும் பொருளாதார நலம் ஆகிய இரண்டும் எதிர் துருவங்கள் இல்லை, மாறாக, அவற்றிற்கிடையே இயல்பான ஒற்றுமைகள் உள்ளன" அல்லது "எங்களின் பண்பாட்டின் அடிப்படையில், புதிய தொழில்நுட்பங்களின் உதவியால் மதம் மற்றும் ஆன்மீக மதிப்புகளை வெற்றிகரமாக இணைக்க முடியும்" அல்லது "பர்மியர்களான நாங்கள் எங்களின் கனவு மற்றும் அதனைச் செயல்படுத்தும் வழிமுறைகள் ஆகியவை எங்களின் பண்பாட்டிற்கு நேர்மையாக இருக்குமாறு பார்த்துக்கொள்வது எங்களின் கடமையாகும். இதனை நாங்கள் என்றென்றும் கருத்தில் கொள்வோம்"


அதே வேளையில், அந்த நாடுகள் தங்கள் பெருளாதார வளர்ச்சியை நவீன பொருளாதார அடிப்படையில் கட்டமைக்க, முன்னேறிய நாடுகள் என்றழைக்கப்படும் நாடுகளின் நவீன பொருளாதாரவியலாளர்களை அழைத்து, தாங்கள் பின்பற்றவேண்டிய கொள்கைகளை வகுக்க, மற்றும் வளர்ச்சிக்கான பெரும் திட்டங்களைக் கட்டமைக்க முயல்கின்றன. அவற்றை ஐந்தாண்டு திட்டங்கள் அல்லது வேறெதாவது தலைப்பில் அழைத்துக் கொள்கின்றன. நவீன பெருளாதாரவியலாளர்களால் கொண்டு வரப்பட்ட நவீன பொருளாதாரம் என்பதைப் போன்று பௌத்தர்களின் வாழ்முறையின் அடிப்படையில், பௌத்தப் பொருளாதாரம் என்ற ஒன்றிற்கான வழிமுறை இருப்பதை அவர்கள் காண்பதில்லை.

பெரும்பாலான நிபுணர்களைப் போன்றே, பொருளாதார வல்லுநர்களும், அவர்களின் அறிவியல் என்பது எந்த முன்முடிவுகளும் இல்லாமல், முழுமையான மற்றும் மாறாத உண்மைகளின் அடிப்படையில் அமைந்தது என்று கருதுகின்றனர். இது ஒரு மனோதத்துவ அடிப்படையிலான போதாமை என்றால் மிகையில்லை. சிலரோ, புவி ஈர்ப்பு விசையைப் போன்று பொருளாதார விதிகளும் வாழ்வியல் (மீவியற்பியல் அல்லது பௌதீக அதீதவியல் (*Metaphysics*) மற்றும் அதன் மதிப்புகளோடு எந்தத் தொடர்பும் இல்லாதது என்று உரிமைக் கோரும் அளவிற்குச் செல்கின்றனர். நாம் அத்தகைய வழிமுறைகள் பற்றிய வாதங்களில் ஈடுபடப் போவதில்லை. மாறாக, நவீன பொருளாதாரம் மற்றும் பௌத்தப் பொருளாதாரம் ஆகியவற்றின் பார்வையில், சில அடிப்படைகளை ஆய்ந்தறிவோம்.

"செல்வத்தின் ஆதாரம் மனித உழைப்பு" என்பது உலகெங்கிலும் ஒத்துக் கொள்ளப்பட்டுள்ளது. நவீன பொருளாதார நிபுணர்கள், உழைப்பாளிகள் அல்லது "உழைப்பு" என்பது தவிர்க்க முடியா ஒரு தீமை என்றே கருதுகின்றனர். முதலாளியின் பார்வையில், (மனித) உழைப்பு என்பது இயந்திரங்களின் மூலம் முற்றாய் நீக்கப்படவேண்டிய அல்லது மிகக் குறைந்த கொள்முதல் விலைக்குக் கொள்ளத்தகுந்த ஒரு விஷயம் ஆகும்.

ஒரு உழைப்பாளியின் பார்வையில், உழைப்பு என்பது ஒரு பயனற்றதாகும், தன்னுடைய ஓய்வு நேரத்தை மற்றும் சௌகரியத்தை, தியாகம் செய்வதற்குக் கொடுக்கப்படுவதே ஊதியமாகும். எனவே, முதலாளிக்கு, ஊழியர்கள் இல்லாமல் உற்பத்தியைப் பெறுவதும், பணியாளருக்கு, வேலைவாய்ப்பு இல்லாமல் வருமானத்தைப் பெறுவதுமே இலட்சியப் பார்வையாக உள்ளது.

இந்தப் பார்வைகளின் தாக்கம், கோட்பாட்டு ரீதியாகவும், நடைமுறை ரீதியாகவும் பல விளைவுகளைக் கொண்டமைகிறது. வேலையைப் பொறுத்தவரை அதை ஒழிப்பது தான் லட்சியம் என்றால், "வேலைச் சுமையைக் குறைக்கும்" ஒவ்வொரு முயற்சியும் சிறப்பானதே. தானியங்கிமயமாக்கலைத் தவிர மிகவும் சிறப்பான முறையாக, ஆடம் ஸ்மித்தின் "Wealth of Nations" நூலில், ஊசி தொழிற்சாலையை வைத்துக் கூறப்பட்டுள்ள உதாரணமான "உழைப்பினைப் பிரித்தல்" எனப்படும் முறை கருதப்படுகிறது. இது, மனிதர்கள் தங்களுக்கு உரித்தான நிபுணத்துவம் பெற வைப்பதற்கு மாறாக, ஒவ்வொரு முழுமையான உற்பத்திச் செயல்முறையையும் சிறு சிறு துணுக்குகளாகப் பிரித்து தொழிலாளிகளுக்கு நிர்ணயிப்பது. இதன் மூலம் தொழிலாளிகள் மிகச் சொற்பமான செயல்முறையை, துணுக்குகள் போலச் செய்வதன் மூலம், அதிவேகமான உற்பத்தியை உறுதிப்படுத்த முடியும். ( ஒரு வாகனத்தை ஒரு தொழிலாளியே ஒட்டுமொத்தமாகக் கட்டமைப்பதை விட, பல தொழிலாளிகளைக் கொண்டு ஒவ்வொருவருக்கும் ஒரு துணுக்கு வேலையை அதாவது, ஒருவர் குறிப்பிட்ட திருகு மற்றும் மறையை ( Bolt and Nut) சரியாகப் பொறுத்துவது போன்று, பலரையும் கொண்டு அந்த வாகன உற்பத்திச் செயலை பிரித்துத் தருவதால், குறைந்த நேரத்தில் அதிக வாகனங்களை உற்பத்தி செய்ய முடியும். )




பௌத்தத்தின் பார்வையிலான வேலையின் செயல்பாடு குறைந்த பட்சம் மூன்று அம்சங்களைக் கொண்டுள்ளது.

1) ஒரு மனிதன் தன்னுடைய திறன்களை வளர்க்க, பயன்படுத்த வாய்ப்பினை வழங்குதல்.

2) ஒரு குழுவினருடனான கூட்டு உழைப்பின் மூலம், தன்னுடைய தன்முனைப்பை விட்டு வெளிவர உதவுதல் மற்றும்

3) மானுட குலத்திற்கு தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை வெளிக் கொணர்வது.

இந்தக் கண்ணோட்டம் தரும் விளைவுகள் முடிவற்றவை எனலாம். ஒரு வேலையை பொருளற்றதாக, சலிப்பு தட்டக்கூடியதாக, திகைப்பு அல்லது பதற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் கட்டமைப்பது ஒரு விதக் குற்றச் செயலே எனலாம். இது உழைக்கும் மக்களை விட உருவாக்கப்படும் பொருளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக அமைவது மட்டுமல்ல, உழைப்பாளிகளின் மீதான இரக்கம் இல்லாத அவர்களின் தனித்துவத்தை நொறுக்கும் வகையிலான ஒரு விஷயமாகும். அதேபோல, ஓய்வை நோக்கிய ஆர்வத்தை வைத்து உழைப்பை வெறுத்தொதுக்கும் ஒரு மனநிலை என்பது, மனிதனின் இருப்பைக் கேள்விக்குட்படுத்தவது ஆகும். உழைப்பும் ஓய்வும் ஒன்றையொன்று வலுப்படுத்தும், சேர்ந்து இயங்கும் விஷயங்களாகும். உழைப்பை வெறுத்து ஓய்வை எதிர்நோக்கி உழைப்பைச் செய்கையில், அந்த உழைப்பினால், அதனால் உற்பத்தியாகும் பொருள் மற்றும் சேவைகளின், ஆக்கத்திறனால் ஏற்படும் மகிழ்ச்சியைக் குறைத்து மதிப்பிடுவதாகும்.



பௌத்தக் கண்ணோட்டத்தின் படி, இரண்டு வகைகளில் இயந்திரமயமாக்கலைத் தெளிவுப் படுத்தலாம். அவை

*1)* மனிதனின் திறமை மற்றும் ஆற்றலை மேம்படுத்துவது, மற்றொன்று


*2)* மனிதனை ஒரு இயந்திர அடிமையிடம் வேலை செய்ய வைப்பது.

இவ்விரண்டையும் எவ்வாறு வேறுபடுத்திப் பார்ப்பது? நவீன மேற்குலகைப் பற்றியும் பண்டைய கிழக்கையும் அறிந்த மனிதரான ஆனந்த குமாரசாமி அவர்கள் "ஒரு கைவினைஞரை (தொழிலாளி) அனுமதித்தால், அவர் ஒரு கருவிக்கும் இயந்திரத்திற்குமான வித்தியாசத்தை முற்றாய் விளக்கிவிடுவார். ஒரு கைத்தறி நெசவாளர் தன்னுடைய கைத்தறியின் மூலம் அழகான ஒரு புடவையை, ஆடையை நெய்துவிடுவார். ஆனால், விசைத்தறியோ ஒரு எந்திரம், அது ஒரு மனிதரின் திறமையை மேம்படுத்துவதில்லை, மாறாக அதுவே மனிதர்களின் உழைப்பைக் குறைத்து பொருட்களை உற்பத்தி செய்து குவிக்கின்றது". இதிலிருந்து பௌத்தப் பொருளாதாரம் என்பது நவீன பொருளாதாரத்தை விட வேறுபட்டுள்ளதை உணரலாம். பௌத்தம் நாகரீகத்தின் சாரத்தை, தேவைகளைப் பெருக்குவதில் அல்ல மாறாக மனிதர்களை செம்மைப்படுத்துதிலேயே ஈடுபாடு காண்கிறது. மனிதர்களைச் செம்மைப்படுத்துவது என்பது அவர்கள் செய்யும் வேலைகளின் அடிப்படையிலேயே அமைகிறது. அந்த வேலை சரியான முறையில், மனித மாண்பை, அவர்களின் சுதந்திரத்தை போற்றும் வகையில் அமைகையில், அவர்களின் உற்பத்தி மகத்துவம் வாய்ந்ததாக அமைகிறது.

இந்திய தத்துவவியலாளர் மற்றும் பொருளாதார அறிஞர் ஜே. சி. குமரப்பா இவ்வாறு கூறுகிறார், "உழைப்பு என்பது சரியான வகையில் பாராட்டப்பட்டு, பயன்படுத்தப்பட்டால், அது மனிதரின் உடலுக்கு உணவு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ அதே போல அவரைச் செம்மைப்படுத்த உழைப்பு வழிவகுக்கும். அது அவரைச் செழுமைப்படுத்தி அவருடையத் திறமைகளை மேன்மைப்படுத்துவதன் மூலம் சிறந்த ஆக்கத்திறனால் நல்ல உற்பத்தியை வழங்க வழிவகை செய்யும். அவருடைய எண்ணத்தை ஒருமுகப்படுத்தி, சரியான வகையில் மெருகேற்றி, ஒழுக்கத்தின் வழியே அவரை ஆக்கப்பூர்வமான வழிகளில் வழிநடத்தும். மனிதரின் மதிப்பினைக் கூட்டவும், அவருடைய திறமைகளை செதுக்கவும் செய்யும்"

ஒரு வேளை, ஒரு மனிதன் வெறும் சம்பளத்திற்காக அல்லாமல், அவனைச் செழுமைப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பை வழங்கும் வேலையைப் பெறவில்லை என்றால், அது ஒரு இழப்பேயெனலாம். ஒரு நவீன பொருளாதார நிபுணர், முழு வேலை கொடுப்பது லாபகரமானதா அல்லது சிறுசிறு வேலைகளாக பலரை வேலைக்கு அமர்த்தி குறைந்த சம்பளம் கொடுப்பதால் ஏற்படும் உபரி வேலையாட்கள் மற்றும் ஸ்திரமான கூலி போன்றவை லாபகரமானதா என்று தன் நுட்பமான கணக்கீடுகள் மூலம் ஆராயலாம். வெற்றியின் அடிப்படை என்பது அவரைப் பொறுத்தவரை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் எவ்வளவு





அதிகமான பொருட்களை உற்பத்தி செய்யப்படுகிறது என்பதாகும். "ஒரு பொருளுக்கான அவசரத் தேவை குறைவாக இருந்தால், அந்த "அவசரத்தின்" அடிப்படையிலேயே கடைசி மனிதன் அல்லது மனிதர்களை வேலைக்கு அமர்த்துவதற்கான தேவையும் அமைகிறது" என்கிறார் பேராசிரியர் கல்பிரெய்த், அவருடைய "த அஃப்ளூயன்ட் சொசைட்டி" (*The Affluent Society*) என்ற நூலில். மேலும், "வேலையின்மையை ஸ்திரத்தன்மைக்காக அனுமதிக்க முடியும் என்றால், அந்த வேலையின்மையால் பாதிக்கப்படுவோருக்கு அந்தப் பொருளை வழங்கி அவர்களின் வாழும் நிலையை மேம்படுத்திக் கொள்ளவதற்கான வாய்ப்பை வழங்கவேண்டும் என்பது பழமைவாத முன்னோடிகளின் முன்மொழிவு" என்கிறார்.

பௌத்தத்தின் பார்வையில் இது, மக்களை விட உற்பத்திப் பொருள்களே முக்கியம் என்றும், மக்களின் ஆக்கப்பூர்வமான படைப்புத் திறனை விட, அவர்களின் நுகர்திறனே முக்கியம் என்பதை நிறுவுவதாகும். அதாவது உழைப்பாளிகளை விட, உற்பத்திச் செய்யப்படும் பொருட்களுக்கு முக்கியத்துவத்தை வழங்குவது. அதாவது, மனிதர்களை விட உற்பத்திப் பொருட்களே மேல் என்ற நிலைக்கு மாறும் கீழ்மையாகும். பௌத்தப் பொருளாதாரம் என்பதன் அடிப்படை என்பது, முழு வேலையை வழங்குவதும், "வெளிப்புற" வேலை தேவைப்படுவோர் அனைவருக்கும் வேலை வாய்ப்பை வழங்குவதும் ஆகும். அது வெறுமனே உற்பத்தியையோ அல்லது அதிகப்பேறுக்கான வேலையையோ கருத்தில் கொள்வதில்லை.

அதாவது "முழு வேலை" என்பது ஒரு மனிதர் தன் திறமைகளைச் செழுமைப்படுத்திக்கொள்ள வழங்கும் வாய்ப்பாகும். வெறுமனே ஒரு உற்பத்திச் சங்கிலியில் ஒரு சிறு துண்டை செய்வதல்ல. சிறு துண்டைச் செய்ய பலரையும் வேலைக்கமர்த்துவது, அவர்களின் திறமையை, ஆளுமையைச் சிறுமைப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், அவர்களை ஒரு மிகப்பெரிய உற்பத்திச் சங்கிலியில் ஒரு சிறு புள்ளியாகச் சுருக்குவது போன்றது - *a cog in the machine*). பெண்கள், "வெளி" வேலைக்குச் செல்வது அவர்களின் தேர்வாக அமைய வேண்டும். மாறாக, அது கட்டாயமாக இருக்கக் கூடாது. பச்சிளம் குழந்தையை ஈன்றெடுத்தத் தாயை பணிக்கு அமர்த்துவது அவர்களின் குழந்தையை புறந்தள்ளும் செயலாகப் பார்க்கின்றது பௌத்தப் பொருளாதாரம். இது நவீனப் பொருளாதாரத் தத்துவங்களின் அடிப்படையில், ஒரு திறம் வாய்ந்த தொழிலாளியை சிப்பாயாகப் பணியமர்த்துவதைப் போன்றதாகும்.

ஒரு பொருள்முதல்வாதி பொருட்களை உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்துவார். ஆனால் ஒரு பௌத்தர், முழு விடுதலையைக் கருத்தில் கொண்டவராக இருப்பார். பௌத்தம் என்பது "மத்திம பாதை" ஆகும். எனவே அது உடல் நலத்திற்கு எதிரானதும் அல்ல. செல்வம் விடுதலைக்கு தடையாக விளங்கக் கூடாது. இன்பத்தை அனுபவிப்பதற்காக அன்றி செல்வத்திற்காக ஏங்குவதும், அதன் மீது மேலும் மேலும் ஆசை கொள்வதுமே செல்வத்தின் விளைவாக இருக்கிறது. இது விடுதலைக்கு முற்றிலும் எதிரானது ஆகும். எனவே, பௌத்தப் பொருளாதாரத்தின் அடிப்படை, எளிமையும், அஹிம்சையும் ஆகும். ஒரு பொருளாதார வல்லுனரின் பார்வையில், பௌத்த வாழ்வின் அடிப்படை என்பது முழுமையான பகுத்தறிவு. இதில் வியக்கத்தக்க வகையில், சிறு விஷயங்களே அதியற்புத தீர்வுகளை வழங்குகின்றன.

**(அடுத்த இதழில் முடிவுறும்)**

("பௌத்தப் பொருளாதாரம்" (Buddhist Economics) என்ற இந்தக் கட்டுரை முதன் முதலாக "Asia: a handbook" என்ற புத்தகத்தில் 1966ல் பதிப்பிக்கப்பட்டது. இந்தக் கட்டுரையை எழுதியவர் E. F. சூமாக்க (E. F. Schumacher) ஆவார். இந்தக் கட்டுரையின் காலக்கட்டத்தோடு ஒப்பிடுகையில், இன்று உலகம் மிக வேகமாக மாறியிருந்தாலும், இந்தக் கட்டுரையின் சாராம்சம், இன்றளவிலும் பொருளாதார உலகில் ஒரு மாற்றத்தின் தேவையை நிறுவுவதாக உள்ளது என்பதை நவீன பொருளாதார மேதைகளும் அங்கீகரித்துள்ளனர்)

பௌத்தப் பொருளாதாரம்

E. F. சூமாக்க



# பொருட்களை விட மனித மதிப்பே உயர்ந்தது

நவீன பொருளாதார அறிஞருக்கு இதனைப் புரிந்து கொள்வதில் சிரமமிருக்கக் கூடும். ஏனெனில், அவர் வாழ்வின் தரம் என்பதை நுகர்தலை அடிப் படையாகக் கொண்டே அளவிடுகின்றார். அவரைப் பொறுத்தவரை தன் வாழ்நாளில் அதிகமாக நுகரும் ஒரு மனிதரே "தரமான வாழ்க்கை" வாழ்பவராகக் கருதப்படுகிறார், குறைவாக நுகரும் மனிதரை விட. ஒரு பௌத்த பொருளாதார நிபுணருக்கு இந்த அனுகுமுறை முற்றிலும் பகுத்தறிவற்ற அனுகுமுறையாகும். நுகர்தல் (*consumption*) என்பது வெறும் ஒரு வழிமுறைதான், நமது இலக்கு என்பது குறைந்த பட்ச நுகர்தலோடு அதிகபட்ச நல்வாழ்வை, தரமான வாழ்வைப் பெறுவதாக அமையவேண்டும்.

உடையின் இலக்கு என்பது சீதோஷ்ண நிலைகளில் இருந்து பாதுகாப்பை, பார்வைக்குகந்த வகையிலும் இருப்பது என்றால், அதனை மிகக்குறைவான முயற்சியில், வருடாந்திர அளவில், குறைந்த பட்ச அளவிலான துணிச் செலவில் பெறுவதாக இருக்கவேண்டும். குறைவான உற்பத்தி நேரம் என்பது, அதிகபட்ச நேரத்தை மற்றும் ஆற்றலை, ஆக்கப்பூர்வமான படைப்பாற்றலுக்கு ஒதுக்க வழிவகை செய்யும். மேற்கத்திய உலகில், உடையை வடிவமைப்பதில் செலவழிக்கப்படும் துணி, காலம், மற்றும் ஆற்றல் அபரிதமாக உள்ளது. சில உடைகளில் வெட்டப்படாத துணிகளை தொங்க விடுவது போன்றவை சிக்கனமற்றதாகும். உற்பத்திப் பொருட்களை எளிதில் தேய்ந்து போகும் வகையில் உற்பத்திச் செய்வதும், மோசமான வகையில், அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்துவதும் காட்டு மிராண்டித்தனமான அனுகுமுறையாகும். உடையை அடிப்படையாகக் கொண்டு சொல்லப்பட்ட இந்த விஷயத்தினை, மற்ற விஷயங்களில் மனிதரின் தேவைகளோடும் ஒப்பிடலாம். பொருட்களின் உரிமையும் நுகர்தலும் ஒரு வழிமுறையாகும், பௌத்தப் பொருளாதாரம் என்பது, குறைவான நுகர்தலைக் கொண்டே அதிகபட்ச திருப்தியை அடைவதற்கான முறையான ஆய்வு முறையாகும்.

நவீன பொருளாதாரமோ, நுகர்தலே பொருளாதாரச் செயல்பாட்டின் இறுதி வடிவமாகவும், மேலும் அதற்கான செயல்பாடுகளே, உற்பத்தி, உழைப்பு, மூலதனம் மற்றும் அனைத்தும் என்கின்றது. பௌத்தப் பொருளாதாரமோ, மனிதர்களின் திருப்தியை அதிகரிக்க உகந்த முறையிலான நுகர்தலை முன்னிறுத்த, நவீனப் பொருளாதாரமோ நுகர்தலை அதிகப்படுத்த உகந்த உற்பத்தி முறையை முன்னெடுக்கின்றது. உகந்த முறையில் நுகர்வை அடையத் தேவைப்படும் முயற்சியை விட, அதிக பட்ச நுகர்தலுக்கு உகந்த முறையிலான உந்துதலை கொடுப்பது சற்று சவாலானது என்பதை வெளிப்படையாக அறியலாம். அமேரிக்கா போன்ற தேசங்களில் உழைப்பைக் குறைக்கும் எந்திரங்களின் பயன்பாடு பர்மா போன்ற நாடுகளை

விட அதிகம் என்றாலும், பர்மா போன்ற நாடுகளில் வாழ்வதற்கான அழுத்தம் மற்றும் சவாலான சூழல், அமெரிக்கா போன்ற தேசத்தை விட குறைவே,

எளிமையும் அஹிம்சையும் மிகவும் நெருக்கமானவை. உகந்த முறையிலான நுகர்தல் என்பது, குறைந்தபட்ச உற்பத்தியைக் கொண்டே மனிதர்களின் அதிகபட்ச திருப்திக்கு வழி வகுக்கின்றது. ஒப்பீட்டளவில் குறைந்த நுகர்தலைக் கொண்டு அதிகபட்ச திருப்தியை வழங்கும் முறையின் மூலம், குறைவான நுகர்தலைக் கொண்டு, வாழ்வில் அழுத்தங்கள் இன்றி வாழ வழி வகுப்பது, பௌத்தக் கோட்பாட்டில் அடிப்படையான "தீமைச் செய்வதை கைவிடுங்கள், நன்மைகளைச் செய்யுங்கள்" என்பதைக் கொண்டுள்ளது. அனைத்து இயற்கை வளங்களும் ஏதோவொரு வகையில் குறைவாயுள்ளதால், குறைந்த நுகர்தலின் மூலம் திருப்தியடைவோரை விட, அதிகபட்ச நுகர்தலைக் கொண்ட சமூகம் வன்முறைகள் மிகுந்ததாக உள்ளது. அதேபோல, அதிகபட்ச சுய சார்புடைய வாழ்வைக் கொண்டுள்ள மக்களைக் கொண்டச் சமூகங்களோடு ஒப்பிடுகையில், உலகளாவிய வர்த்தக அமைப்புகளைக் கொண்டச் சமூகங்கள் அதீத வன்முறைகள் கொண்டதாகவே உள்ளது.

பௌத்தப் பொருளாதாரத்தின் அடிப்படையில், உள்ளூர் வளங்களைக் கொண்டு உள்ளூர் மக்களுக்கான உற்பத்தியைச் செய்வதே சிறந்தப் பகுத்தறிவு அடிப்படையிலான பொருளாதார வாழ்வாகும். மேலும், வெகுதூர தேசங்களிலிருந்து இறக்குமதி செய்து அவற்றைக் கொண்டு பொருட்களை உற்பத்தி செய்து வெகுதூர தேசங்களுக்கு ஏற்றுமதி செய்வது என்பது பொருளாதார அடிப்படையில் சிக்கலான ஒன்று, அத்தகைய செயல்பாடுகள் விதிவிலக்கான செயல்பாடுகளாக சிறு அளவிலான உற்பத்திக்கே சரியானதாக அமையும். ஒரு மனிதரின் இருப்பிடத்திலிருந்து அவரின் அலுவலகம் அலலது பணியிடத்திற்குச் செல்ல அதிகபட்சமான போக்குவரத்துச் சேவைகளைப் பயன்படுத்துவது என்பது சரியான அணுகுமுறையல்ல.

அதே சமயம் அது உயர்ந்த வாழ்க்கைத் தரமுமல்ல என்று நவீன பொருளாதாரம் கூறுவதைப் போன்றே, பௌத்தப்பொருளாதாரமும், ஒரு மனிதருக்கான திருப்திகரமான வாழ்க்கைக்கு தொலைதூர மூலப்பொருட்களைப் பயன்படுத்துவது தோல்விகரமானது என்கின்றது. முந்தையது, ஒரு நாட்டின் போக்குவரத்து அமைப்பால் சுமந்து செல்லும் மக்கள்தொகையில் ஒரு நபருக்கு எடுத்துச் செல்லப்படும் பொருளின் எடை (*ton*) மற்றும் அதனை எடுத்துச் செல்லக் கடக்கவேண்டிய தூரம்



(மைல்) ஆகியவற்றின் வீதம் அதிகரிப்பதைக் காட்டும் புள்ளிவிவரங்களை பொருளாதார முன்னேற்றத்திற்கான சான்றாக எடுத்துக்கொள்கிறது, அதே நேரத்தில் பௌத்தப் பொருளாதார நிபுணருக்கு - அதே புள்ளிவிவரங்கள் நுகர்வு முறையில் மிகவும் விரும்பத்தகாத சரிவைக் குறிக்கின்றது.

பௌத்த மற்றும் நவீன பொருளாதாரம் ஆகிய இரண்டிற்கும் இடையேயான மற்றுமொரு முக்கியமான வித்தியாசம் இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதில் எழுகிறது. பெர்ட்ரண்ட் டி ஜோவெனில் ( *Bertrand de Jouvenel* ) என்ற புகழ்பெற்ற அரசியல் தத்துவஞானி "மேற்கத்திய மனித"னைப் பற்றிக் குறிப்பிடும் வார்த்தைகள் நவீன பொருளாதாரத்தைப் பற்றி பகர்வதாய் அமைகிறது.

"மேற்கத்திய மனிதன் மனித உழைப்பைத் தவிர எதனையும் ஒரு செலவீனமாகக் கருதுவதில்லை; அவன் எவ்வளவு கனிம வளத்தை விரயமாக்குகிறான் என்பதைப் பற்றிச் சிந்திப்பது கூட இல்லை, அதைவிட மோசமாக, எவ்வளவு உயிர் வளங்களை விரயமாக்குகிறான் என்பதை கணக்கில் கூடக் கொள்வதில்லை. மனித வாழ்வு என்பது பல உயிரினங்கள் சேர்ந்த இயற்கைச் சூழலை அடிப்படையாகக் கொண்டது என்பதை உணரக்கூட அவன் தயாராக இல்லை. உலகில் பெரும்பாலான ஆளும் மையங்களாக நகரங்களே இருக்கின்றன, அவை மனிதர்களைத் தவிர மற்ற இயற்கை சூழலிலிருந்து தள்ளியிருப்பதால், அவர்களுக்கு இயற்கை சூழல் பற்றிய பிரக்ஞையே இருப்பதில்லை. இதனால் இயற்கை வளங்களான நிலம், நீர், மரங்கள் போன்றவற்றை விரயமாக்குவதை எந்தவிதக்



குற்றவுணர்வுமின்றிச் செய்கின்றான்"

புத்தரின் போதனைகள், அனைத்து உயிரனங்களிடமும், மரங்கள் உட்பட, மதிப்பும், மரியாதையும், அஹிம்சையையும் பின்பற்றச் சொல்கின்றது. பௌத்தர்கள் மரங்களை நட்டு அவை பாதிப்புகளிலிருந்து தப்பி வளரும் வரை அவற்றைப் பாதுகாக்கவேண்டும் என்றும் போதிக்கப்படுகிறது. பௌத்தப் பொருளாதாரவியலாளர்களும் இத்தகைய ஒரு விதியைப் பின்பற்றுவதால், எந்தவொரு வெளிநாட்டு உதவியையும் நாடாமல், தற்சார்புடன் தேசங்கள் இயங்கும் என்று ஊக்குவிக்கின்றன. தென்கிழக்கு ஆசியாவில் நிகழ்ந்த பொருளாதார வீழ்ச்சி இத்தகைய ஒரு பார்வையும் அக்கறையும் இல்லாமல், இயற்கை வளங்களான மரங்களைக் கையாண்டதே காரணம்.

நவீனப் பொருளாதாரம் மரபு சார் மற்றும் மரபு சாரா எரிபொருள்களைப் பற்றி பெரிதும் பொருட்படுத்துவதில்லை, அவற்றை, அவற்றிற்கான சந்தை விலையை வைத்தே மதிப்பிடுகின்றன. இதனால் பல எரிபொருள்களை, நிலக்கரி, எண்ணெய், மரக்கட்டை மற்றும் நீராற்றல் ஆகியவற்றை நவீனப் பொருளாதாரம், அவற்றின் ஒப்புமை விலையை வைத்தே மதிப்பிடுகின்றது. மலினமான ஒன்றிற்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது, அப்படியல்லாதவற்றைத் தேர்ந்தெடுப்பது அறிவற்றதும், பொருளாதாரத்திறம் அற்றதாகவும் கருதப்படுகிறது.

ஆனால் பௌத்தப் பொருளாதாரம் என்பது அவ்வாறு அணுகுவதில்லை, மாறாக, அது மரபுசாரா எரிபொருள்களான நிலக்கரி, எண்ணெய் ஆகியவற்றை, மரபுசார் எரிபொருள்களான மரக்கட்டை மாற்று நீராற்றல் ஆகியவற்றிற்கிடையேயான வித்தியாசத்தை மிகச் சரியாகப் பகுத்தாய்ந்து அவற்றைக் கையாள்கிறது. மரபு சாரா எரிபொருள்களை பயன்படுத்துவது மிகக்குறைந்த அளவிலோ அல்லது தவிர்க்க முடியாத தருணத்திலோ, மிகவும் அக்கறையுடனும், பாதுகாப்புடனும்தான் நடைபெறவேண்டும் என்கின்றது. அவற்றை அலட்சியமாகவோ, ஆடம்பரமாகவோ பயன்படுத்துவது ஒருவகையில் இயற்கை வளங்களைக் கையாள்வதில் நிகழ்த்தப்படும் வன்முறையே! முழுவதுமாக அஹிம்சையைப் பின்பற்ற முடியாவிட்டாலும், ஒரு மனிதன் தன் செயல்பாடுகளில், கூடுமானவரை வன்முறையைத் தவிர்ப்பதைக் கவனத்தில் கொண்டே செயல்படவேண்டும்.

ஓர் ஐரோப்பிய பொருளாதார நிபுணர், ஐரோப்பிய கலைப் பொருட்கள் அனைத்தையும், அமெரிக்காவிற்கு கவர்ச்சிகரமான விலைக்கு விற்பதை பெரும் சாதனையாக ஏற்றுக்கொள்ள மாட்டார். அது போன்றே, ஒரு பௌத்த பொருளாதார நிபுணரும், மரபு சாரா எரிபொருள்களைச் சார்ந்திருக்கும் பொருளாதார வாழ்வை ஒரு ஒட்டுண்ணி வாழ்க்கை என்றே கூறுவார், ஏனெனில், அத்தகைய அணுகுமுறை வருமானத்தைச் செலவு செய்வதை விடுத்து, மூலதனத்தை செலவு செய்வதை ஒத்தது ஆகும். அத்தகைய வாழ்முறை, நிலையானதல்ல, மாறாக தற்காலிக உதவி முறை என்றே கூறலாம். உலகின் வளங்களில் மரபு சாரா எரிபொருள்களான, நிலக்கரி, கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை வாயு ஆகியவை சமமற்ற முறையில் இவ்வுலகின் பகுதிகளில் கிடைக்கின்றன, மேலும் அவை அனைத்தும் சந்தேகத்திற்கிடமின்றி குறைவான அளவிலேயே உள்ளன. அவற்றை அதிகரித்துவரும் விகிதத்தில் தொடர்ந்து பயன்படுத்துவது, இயற்கை வளங்களின்







மீதான வன்முறை மட்டுமல்ல, அத்தகைய வன்முறை, மனிதர்களுக்கிடையேயான வன்முறைக்கும் வித்திடும்.

பௌத்தத்தினை வெறும் மதம் மற்றும் ஆன்மீக விழுமியங்களோடு மட்டும் நிறுத்திவிட்டு, நவீன பொருளாதாரத் தத்துவங்களை ஏற்றுக் கொண்டு "வளர்ச்சி" காணத் துடிக்கும் பௌத்த நாடுகளுக்கு, இந்த உண்மைகள் மட்டுமே போதுமான விளக்கத்தைக் கொடுக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. பௌத்த பொருளாதாரத்தை ஒரு கனவைத் தவிர வேறு எதுவும் இல்லை என்று அவர்கள் நிராகரிக்கும் முன், நவீன பொருளாதாரத்தால் வரையறுக்கப்பட்ட பொருளாதார வளர்ச்சியின் பாதை அவர்கள் உண்மையில் இருக்க விரும்பும் இடங்களுக்கு இட்டுச் செல்லுமா என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். கலிபோர்னியா தொழில்நுட்ப நிறுவனத்தின் பேராசிரியர் ஹாரிசன் பிரவுன் ( *Prof. Harrison Brown*) தனது துணிச்சலான புத்தகமான த சேலஞ்ச் ஆஃப் மேன்ஸ் ஃபியூச்சரின் ( *The Challenge of Man's Future*) இறுதியில் பின்வருமாறு பதிவு செய்கிறார்:

"தொழில்துறைச் சமூகம் அடிப்படையில் நிலையற்றதாகவும், விவசாய சமூகத்திற்கு திரும்புவதற்கு உட்பட்டதாகவும் இருப்பதை நாம் காண்கிறோம். அதற்குள்ளான (தொழில்துறைச் சமூகம்) தனி நபர் சுதந்திரத்தை வழங்கும் அமைப்பு, ஸ்திரமற்று, கட்டுப்பாடான நிறுவன மற்றும் சர்வாதிகாரத் தன்மையை எதிர்க்கும் வலுவற்று உள்ளது. யதார்த்தத்தில், தொழில் துறை நாகரிகத்திற்கான நீட்டிப்பை அச்சுறுத்தும் விஷயங்களை ஆராய்கையில், அதன் நிலைத்தன்மை மற்றும் தனிமனித சுதந்திரத்தை சமமாக பாவிக்கும் வழியைப் பின்பற்றுவது கடினமாக உள்ளது."

நாம் இதனை மிக நீண்ட காலப் பார்வை என்று கருதினாலும், தற்போது பின்பற்றப்படும் "நவீனமயமாக்கல்" என்பது, மதம் மற்றும் ஆன்மீக விழுமியங்கள் இன்றி சரியான தீர்வுகளைத் தருகின்றனவா?. வெகுஜனமக்களைக் கணக்கில் கொள்கையில், தற்போதைய தீர்வுகள் பேரழிவுகளையே கொண்டு வந்திருக்கின்றன, நகரத்திலும், கிராமத்திலும் வேலைவாய்ப்பு குறைந்து வருகிறது, மேலும், உடலிற்கும், மனதிற்கும் தேவையான ஊட்டமில்லாத பாட்டாளி வர்க்கம் வளர்ந்து வருகின்றது.

உடனடி அனுபவம் மற்றும் நீண்ட கால வாய்ப்பு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு, ஆன்மீக மற்றும் மத விழுமியங்களைப் புறந்தள்ளிவிட்டு பொருளாதார வளர்ச்சியே முக்கியம் என்றவர்களுக்கும் பௌத்தப் பொருளாதாரம் பரிந்துரைக்கப்படலாம். தற்போது நம் முன் இருப்பது, "நவீன வளர்ச்சி" மற்றும் "பண்டைய காலத்தின் தேக்கம்" ஆகிய இரண்டிற்கும் இடையேயானதை தேர்ந்தெடுக்க வேண்டிய கேள்வியல்ல. மாறாக, வளர்ச்சிக்கான சரியான பாதையை, அதாவது பொருள்முதவாத அலட்சியம் மற்றும் அசைவற்ற பாரம்பரியவாதம், இவை இரண்டிற்கும் இடையேயான மத்திய பாதையைக் கண்டறிவதே அந்தக் கேள்வி. சுருங்கக் கூறின், "சரியான வாழ்வாதாரத்தைக்" கண்டறிவது.

**தமிழில்: Er. பெ. சூரியகுமார் அசோகா**

("பௌத்தப் பொருளாதாரம்" (Buddhist Economics) என்ற இந்தக் கட்டுரை முதன் முதலாக "Asia: A Handbook" என்ற புத்தகத்தில் 1966 இல் பதிப்பிக்கப்பட்டது. இந்தக் கட்டுரையை எழுதியவர் E. F. ஷுமாக்க (E. F. Schumacher) ஆவார். இந்தக் கட்டுரையின் காலக்கட்டடத்தோடு ஒப்பிடுகையில், இந்த உலகம் மிகவேகமாக மாறியிருந்தாலும், இந்தக் கட்டுரையின் சாராம்சம், இன்றளவிலும் பொருளாதார உலகில் ஒரு மாற்றத்தின் தேவையை நிறுவுவதாக உள்ளது என்பதை நவீன பொருளாதார மேதைகளும் அங்கீகரித்துள்ளனர்)